சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

# Journal of Modern Thamizh Research

(A Quarterly International Multilateral Thamizh Journal)
Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எலையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

## தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
முனைவர் ம. கவிதா
முனைவர் செ. ஜெயந்தி

*Published by*
RAJA PUBLICATIONS
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-5
Part -5

மற்றொன்று:

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

# Classical Thamizh

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN:2321-0737

# சு. தமிழ்ச்செல்வியின் படைப்புகளில் அளம் காட்டும் வாழ்வியலும் வறுமையும்

**முனைவர் அ. அசோகன்**
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

ஒவ்வொரு படைப்பாளனும் தம் படைப்பின் மூலம் ஏதாவது ஒரு புரட்சியை இச்சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கின்றனர். தாம்வாழும் சமூகத்தில் தாமும், தம்மைப் போன்ற பிறரும் அனுபவிக்கும் இன்பங்களை விட துன்பங்கள் ஏராளமானவை. அத்துன்பங்கள் அவர்களின் அடிப்படை உரிமைகளில் இருந்து ஆரம்பித்து அவர்களின் வாழ்வாதாரத்திற்கான அனைத்தும் பாதிப்பாக அமைந்துவிடுகிறது. அப்படி ஏற்பட்ட பாதிப்பு என்பது இன்றோ, நேற்றோ ஏற்பட்டதல்ல. அது காலங்காலமாக இருந்து வருகிற ஒன்றாகும். ஆவற்றை மாற்றவும் அனைத்தும் எல்லோருக்கும் கிடைக்கவும் பலர் இச்சமூகத்தோடு போராடுகின்றனர். அடித்தட்டு மக்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், அவர்களின் சாதி, இனம், அவர்கள் செய்யும் தொழில், பொருளாதாரம் போன்றவற்றால் தான் அதிகம் ஏற்படுகிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடந்துவரும் இத்தகைய நிகழ்வுகளை இனங்கண்டு அவற்றை சமூகத்தின் எல்லாத் தளங்களிலும் வெளிச்சம்போட்டுக் காட்டுபவர்கள் இன்று பெருகி வருகின்றனர். இந்நிலையில் படைப்பாளர் சு. தமிழ்செல்வி நான் எப்படி தரிசிக்கிறேனோ அதை அப்படியே எனது நோக்கில் உங்களுக்குக் காட்டவிரும்பும் முயற்சியே எனது கதைகள் என்று ஜெயகாந்தன் குறிப்பிட்டுள்ளது போல சு. தமிழச்செல்வியும் தனது ஒவ்வொரு படைப்புகளையும் படைக்கும்பொழுது சமூகம் மீதான தமது அக்கறையையும், இச்சமூகம் புத்தொளிபெற வேண்டும் என்ற எண்ணத்தையும் தமது படைப்புகளின் வழியாக இலக்கிய உலகிற்கு அளித்து வருகிறார்.

வறுமையைப் பாடும் மரபு பண்டைத்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. இதன் தொடர்ச்சி நவீன இலக்கியங்களாகிய நாவல் முதலானவற்றிலும் இடம்பெறுகிறது. சுங்ககால இலக்கியங்களில் வறுமை குறித்த செய்திகள் அதிக அளவில் காணப்படுகின்றன. ஆற்றுப்படை நூல்கள் வறியவர்களின் நிலையையும் அதிலிருந்து அவர்கள் மீளும் நிலையையும் தெளிவுபடுத்துகின்றன. வறுமையால் தனிமனிதனின் நடத்தை சிதைவுறுகிறது. பின்னர் அது சமூகத்தைப் பாதிக்கின்றது. சுங்க இலக்கியங்கள் காப்பியங்களைத் தொடர்ந்து பிற்காலச் சிற்றிலக்கிய வகைகள் தூது இலக்கியங்களிலும் வறுமையின் கொடுமை தெளிவாகக் காட்டப்படுகின்றன.

வறுமை என்பது உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பான குடிநீர், கல்விபெறும் வாய்ப்பு, பிற குடிமக்களிடம் மதிப்புப்பெறுதல் போன்றவை உட்பட்ட வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பவற்றை இழந்தநிலை எனலாம். பல நாடுகளில் முக்கியமான இலக்காக இருந்து வருகிறது. வறுமைக்கான காரணம், அதன் விளைவுகள், அதனை அளப்பதற்கான வழிமுறைகள் போன்றவை தொடர்பான வாதங்கள், வறுமை ஒழிப்பதைத் திட்டமிடுவதிலும் நடைமுறை படுத்துவதிலும் தாக்கத்தைக் கொண்டுள்ளன. வறுமையினால் ஏற்படும் வலி, துன்பம் என்பவை காரணமாக வறுமை விரும்பதகாத ஒன்றாகவே கொள்ளப்படுகின்றது. சுமயங்களும். பிற

அறநெறிக் கொள்கைகளும் வறுமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைச் சிறப்பித்துக் கூறுகின்றன.

நவீன இலக்கியப் புனைவுகளில் வறுமை பற்றி மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன. புதினம் மற்றும் சிறுகதை படைப்பாளர்கள் பலரும் மனித சமூகத்தை வாட்டி வதைக்கும் பொருளாதாரப் பிரச்சனை குறித்துப் புனைந்துள்ளார். பொருளாதார ஏற்றத் தாழ்வால் ஏற்படும் வறுமை குறித்து சு. தமிழ்ச்செல்வி தன்படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

**வறுமை காட்டும் நிலைகள் :**

விவசாயம் பொய்த்துப்போனதால் உப்பளத்தில் வேலை செய்யும் மக்களின் துன்பம் நிறைந்த வாழ்க்கையை 'அளம்' என்ற நாவலில் வடித்துள்ளார். இரவு உணவாகக் கீரையும் தண்ணீரும் தான் இருந்தது. "சோறுதிங்க ஆசயாருக்குமா" என்றாள் ராசாம்பாள்.

"சோத்துக்கு எங்கபோற, வெளிய கெடக்கு பாரு உப்பு அதாங் இப்ப நம்மகிட்ட இருக்கிற மொதலு. ஆண்டவம் புண்ணியத்துல போற எடத்துல வித்து நெல்லாச்சின்னாக்கா நாளக்காவது சோறுதின்னுப் பாக்கலாம்".

நாவலாசிரியரின் படைப்புகள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய இனமக்களின் வாழ்வியல் குறித்த பதிவாகவே உள்ளன. இம்மக்கள் அனுதினமும் உழைப்பதால் கிடைக்கும் கூலியே இவர்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றது. ஒரு நாள் உழைக்காமல் போனாலோ: வேலை கிடைக்கவில்லை என்றாலோ: அல்லது வேறு ஏதேனும் காரணங்களினால் கூலி கிடைக்கவில்லை என்றாலும் அன்றைய உணவு என்பது கானல் நீராகிவிடுகிறது. அரை வயிற்றுக்கும் கால் வயிற்றுக்கும் உணவு உண்டு தங்கள் வாழ்நாளைக் கழிப்பவர்கள் என்பதால் வறுமை என்பது இவர்களின் வாழ்க்கையில் முதன்மையான சவாலாக உள்ளது.

"வீட்டிற்குப்போய் பார்த்தவளுக்கு ஒன்றும் சொல்லமுடியவில்லை. கைகால்களில் தெம்பேயில்லாதது போலாகிவிட்டது. வயதுக்கு வந்திருந்த ராசாம்பாளுக்குக் கட்டிக்கொள்ள இருந்தது ஒரே பாவாடைதான் அதையும் வண்ணாத்தியிடம் போட வேண்டுமே என்று கவலைப்பட்டாள்".

வாழ்க்கையில் இயல்பாக நிகழும் நல்ல நிகழ்ச்சிகளைக் கூட மகிழ்ச்சியாக அனுபவிக்க முடியாதவர்கள். ஒரு மனிதனின் அடிப்படை தேவைகளான உணவு, உடை, உறைவிடம் என்பதில் ஒன்றைக்கூட பெற முடியாதவர்களாக வறுமையின் கோரப் பிடியில் சிக்கித்தவிக்கும் பரிதாப நிலையைக் காட்டுகிறது.

**தாழ்த்தப்பட்ட மக்களின் வறுமை :**

"அன்றாட அத்தியாவசியத் தேவைகளான உணவு. உடை, உறையுள் இவையில்லாத நிலையில் இவற்றைப் பெறுவதற்காக மனிதன் நாள்தோறும் போராடிக்கொண்டிருக்கின்ற நிலையே வறுமை" என்பார் அகிலன். வறுமையில் வாடும் ஏழைமக்கள் வருவாய் இல்லாத போது தங்கள் முதலாளிகளின் இல்லங்களில் ஒருவேளை உணவிற்காக கையேந்தி நிற்கும் அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

"மூதேவிக்கு முகூர்த்தம் போட நெனச்சா அருகும் அத்தமிச்சிப் போவுமாம். நம்மவூட்டுப் பஞ்சக்காத்து ஆண்டவூடு வரைக்கிம் அடிச்சிருக்கும் போலருக்கு. நேரத்தோட எல்லாத்தயும் கழுவி கவுத்துப்புட்டு பல்லாங்குழி வெளையாடிக்கிட்டு ஒக்காந்துருக்காங்க ஆச்சிமாருங்க".

"சோறு இல்லாட்டி என்ன கம்போ, சோளமோ. நாலு வாங்கியாறலாமுல்ல?"

"இன்னிக்கி வெள்ளிக்கெழமயாம். ஏனக்குத் தெரியாம போயிட்டுது. பொழுது சாஞ்ச பெறவு பச்சத்தண்ணி குடுத்தாலே வாழ்வு போயிடுமுன்னு நெனக்கிறவங்க தானஜயத்த அள்ளித் தாராளமா

குடுப்பாங்களா?" நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் கிராமங்களில் தான் வறுமையால் துன்புறுவோர் மிகுதியாக உள்ளனர். வறுமையில் உழலும் மக்கள் வேலை செய்வதைவிட சோற்றுக்காக வேலை செய்து தங்கள் வயிற்றுப்பசியைப் போக்கும் நிலையில் இருப்பதை இவர்களின் வாழ்வியல் மூலம் அறிந்துக்கொள்ள முடிகிறது.

**வறுமையில் கொடுமை :**

'இந்த உலகத்தில் இறைவன் நடத்தும் மிக மிகத் துன்பியல் நாடகம் வறுமை. அதாவது இல்லாமை'. வறுமையின் அவலத்தையும் கொடுமையினையும் எடுத்துரைக்கும் விதத்தில் நாவல் ஆசிரியரின் படைப்புகள் விளங்குகின்றன. வறுமையின் உச்சக்கட்ட கொடுமையினை 'யதார்த்தம்' சிறுகதையின் மூலம் வெளிபடுத்தியுள்ளார்.

"கையில காசில்ல... செத்த புள்ளய பஸ்சுல ஏத்த மாட்டானுவ. நீ அளுவாம வந்தியன்னாக்க பஸ்சுலேயே பெயிரலாம். இல்லாட்டி இஞ்சயே கெடக்க வேண்டியதுதான். அளுவா ஏறிவா" என்று பஸ்சில் ஏற்றிவிட்டு, ஒரு சீட்டில் தன் ஓரமாய் உட்கார வைத்துக் கொண்டாள். பிள்ளையுடன் மாரியப்பன் இரண்டு இருக்கைகள் தள்ளி மறுபுறத்தில் உட்கார்ந்து கொண்டான். தூங்கும் பிள்ளையை அணைப்பது போல் அணைத்துப் பிடித்திருந்தான். துண்டை உடம்பில் போட்டு மூடியிருந்தான்.

துக்கத்தைத் தொண்டைக்குள் அடக்கிக்கொண்டு இருந்த காசைக் கொடுத்துப் பிள்ளைக்கும் சேர்த்து மூன்றரை டிக்கெட் எடுத்தான். நோய்வாய்ப்பட்ட குழந்தைக்கு மருத்துவம் செய்ய வசதி இல்லை, இறந்த பிறகும் வாய்விட்டு அழுவதற்கும் வாய்ப்பு இல்லை. இதுவேதான் உழைக்கும் அடித்தட்டு மக்களின் யதார்த்தமான வாழ்க்கையாகிவிட்டது. நமது நாடு வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்றாக இருந்த போதிலும் வறுமையால் நடைபெறும் துயர நிகழ்வுகளும் அதிகரித்தே வருகின்றன. இன்று ஏற்படும் பிரச்சினைகளுக்கு அடிப்படை காரணம் வறுமையே எனலாம்.

**வறுமையிலும் செம்மை :**

உழைப்பின் மீது மதிப்பு வைத்து வாழத்துடிக்கும் மக்களுக்குக் கூட இந்தச் சமுதாயம் வாழ்வளிக்க இவர்களது வயிற்றுப்பாட்டுக்கு வேலை தர முன்வருவதில்லை. அப்படியிருந்தும் உழைக்கும் மக்கள் அதுவும் அடித்தட்டு மக்கள் வறுமை நிலையிலிருந்த போதும் செம்மையுடையவர்களாய் இருந்துள்ளனர்.

"நடவு நட்ட வயல் முழுவதும் பாளம் பாளமாய் வெடித்துப் போய்க்கிடந்தது. நெற்பயிரெல்லாம் காய்ந்து சருகிட்டுப்போயிருந்தது வேதாம்பாளால் எதுவும் பேச முடியவில்லை தானும் தன் மகளும் நட்ட நடவெல்லாம் விளையாமலே அறுவடையாவதை நினைத்து அவளுடைய மனது வேதனைப்பட்டது. அதற்கு மேல் அங்கு அவளால் நிற்கவும் முடியவில்லை".

"சேரி நாம் பெயிட்டு வாரண்ணி"

"எண்ணண்ணி வந்திய வந்து வரப்புல நின்னுட்டு ஒன்னுமே பேசாம திரும்பிப்போறியளே"

"ஒன்னுமிலன்னி சும்மாதான் வந்தன்" என்றவாறே வீட்டை நோக்கி நடந்தாள் வேதாம்பாள்.

அடுத்த வேளை உணவுக்கு வழி இல்லாத நிலையிலும் தான் உழைத்த உழைப்பிற்கான கூலியைப் பெறுவது அவர்களின் உரிமையாக இருந்த போதிலும், தான் நட்ட நடவினால் பயன் எதுவும் விளையாத போது அதற்கான கூலியைப் பெறுவது நியாயமானது அல்ல என்று வறுமையிலும் செம்மையாக நடந்துகொள்ளும் பண்பானவர்களாக இருப்பதைக் காணமுடிகிறது. எளிய பொருளியல் நிலையில் வாழ்ந்தாலும் உள்ளத்தால் வளமுடையோராக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை இவர்களின் வாழ்வியல் உணர்த்துக்கிறது.

தமிழ் நவீன இலக்கியம் அறுபத்தாண்டுக் கால வரலாறுடையது. எண்ணற்ற படைப்பாளர்களின் படைப்புக்களைப் படித்ததோடு மட்டுமல்லாமல் சமூகத்தின் பல்வேறு நிலைகளில் அடித்தட்டு மக்களாகவும் விளிம்புநிலை மக்களாகவும் வாழ்ந்து வரும் மக்களோடு மக்களாக அவர் வாழ்ந்து, அவர்தம் வாழ்க்கையின் கஷ்டநஷ்டங்களையும் வாழ்வின் போக்குகளையும் அவர்தம் வாழ்வில் ஏற்படும் நெளிவு சுளிவுகளையும் பார்த்ததோடு அவற்றை இச்சமூகத்திற்கு எடுத்துக்காட்டவும் தவறவில்லை.

காலங்காலமாக தொழில் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சாதி ரீதியாகவும் பின்தங்கியிருப்பது மட்டும் அல்லாமல் அவற்றால் அம்மக்கள் படும் வாழ்வியல் துன்பங்களையும் துயரங்களையும் சொல்லவியலாததாகும். குறிப்பாக மீனவர்கள் உப்பளத் தொழிலாளர்கள் ஆடு, மாடு மேய்ப்பவர்கள். வயல்வெளிகளில் வேலை செய்பவர்கள், ஆடைவெளுப்பவர்கள், முடிதிருத்தம் செய்பவர்கள் போன்றோர் இன்றளவும் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் எண்ணிலடங்காதவை ஆகும்.

சமூகத்தின் இத்தொழில் அல்லாத மற்ற பகுதியினரையும் அவர்களின் வாழ்க்கையையும் வழிகளையும் பெருக்கவும் அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தவும் பாடுபடும் இவர்கள், தங்கள் வாழ்வில் சிந்திப்பது வெறும் துன்பமும், துயரமும் மட்டும்தான். இத்துன்பத்தையும் துயரத்தையும் தாண்டி தங்களுக்கான வாழ்வாதாரங்களை முன்னிறுத்திக் கொள்ள முயலும்போது அவர்களை இச்சமூகம் வேறுவிதமாகப் பார்ப்பதால் அவர்கள் மேலும் கூனிக்குறுகிப் போய்விடுகிறார்கள். மற்ற மக்களைப் போல் தாமும் குடும்பம், மக்கள், வருமானம் போன்ற நிலைகளில் உயரவேண்டும் என்று நினைக்கும்போது அதற்காக அவர்களுக்கு இச்சமூகம் கொடுக்கும்விலை வேறு மாதிரியாகவே உள்ளது. இத்தகைய மக்கள் சந்திக்கும் பல்வேறு நிகழ்வுகளைத் தம் பார்வையில் இலக்கியங்களில் பழக்கத் தலைப்பட்டுள்ளார் படைப்பாளர் சு. தமிழ்ச்செல்வி. அவர் எழுதியுள்ள அனைத்துப் புதினங்களும் ஒவ்வொரு படிப்பினையை இச்சமூகத்திற்குக் கற்றுத்தருகிறது.

அளம், கீதாரி, மாணிக்கம், கற்றாழை, கண்ணகி, ஆற்காட்டுத்துறை, பொன்னாச்சரம் மற்றும் அவரது சிறுகதைகள் என அனைத்தும் பல்வேறு சமூக மறுமதிப்பீட்டிற்கான இலக்கியப் படைப்பாக விளங்குகிறது. இத்தகைய படைப்புகளில் அவர்தாம் ஒரு பெண் என்ற நிலைகளில் பெண்களின் உணர்வுகளையும், யூகங்களையும், ஆசைகளையும், அல்லல்களையும் அளம் என்னும் புதினத்தின் வழியாக உப்பளத்தொழில் செய்து, அத்தொழிலால் தம் குடும்பத்தைப் பாதுகாக்கவும், தம குடும்பத்தின் உயர்வுக்காகவும் பாடுபடும் பாத்திரங்களை நயமாகப் படைப்பாளர் வெளிக்காட்டியுள்ள பாங்கு குறிப்பிடத்தகுந்ததாகும்.

**அளம் காட்டும் வாழ்வியல் நிலைகள் :**

தன் கணவன் குடும்பத்தைக் காப்பாற்றுவான் என்ற பெரிய நம்பிக்கையுடன் வாழ்க்கை நடத்தும் சுந்தராம்பாளின் மனவோட்டத்தைப் படைப்பாளர் படைத்துள்ள பாங்கு போற்றுதற்குரியதாகும். தான்மட்டும் இன்பமாக இருந்தால் போதும், தன் குடும்பம் எப்படி போனால் என்ன, என்ற எண்ணம் பெரும்பான்மையான அடித்தட்டு ஆண்களின் போக்காகவே உளளதை படம் பிடித்துக்காட்டுகிறார்.

சுந்தராம்பாளிறகு வடிவாம்பாள், ராசாம்பாள், அஞ்சம்மாள் என்ற மூன்று பெண் பிள்ளைகள் உண்டு. அவர்களை வைத்துக் கொண்டு அவள் படும்பாடு கொஞ்சநஞ்சமன்று. தன் கணவன் ஒருநாள் விடியற்காலையிலேயே எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு சுந்தரம்பாளிடம் நீராகாரம் வாங்கி குடித்துவிட்டு மனைவியிடம் சந்தைக்குப் போவதாகச் சொல்கின்றான். அவளுக்கும் மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. குடும்பம் உருப்படுவதற்கும் கணவன்

ஏதோ செய்யப்போகிறான் என்று முடிப்பதற்குள் அவன் தான் மாட்டை விற்கபோவதாகக் கூறி முடித்தவுடன் அவள்மனது கொதிக்கிறது. உடனே அவள் தன் மனக்குமுறலை வெளிப்படுத்துவதை

"ஒப்புறான வுட்டன், காள மாட்ட விக்கப் போறியளா? அதையும் விதுதுப்புட்டு இஞ்ச யாரு மசுரப் புடுங்கிக்கிட்டு ஒக்காந்துருக்கப் போறியா (அள. ப. 8) என்று படைப்பாளர் விளக்குகிறார். உழைப்புத்தான் வாழ்க்கையின் அடையாளம். ஆனால் அந்த அடையாளத்தைத் தொலைத்துவிட்டுக் குடும்பத்திற்குச் சுமையைக் கொடுக்கும் ஆண் வர்க்கம் இன்றும் இருக்கத்தான் செய்கிறது என்ற நிலைக்கு எடுத்துக்காட்டாக சுந்தராம்பாளின் கணவன் இருப்பதையும் விளக்குகிறார்.

ஆசையாக கணவனை வேலைக்குப் போகச் சொல்கிறாள் சுந்தராம்பாள். ஆனால் அவனோ, 'எவடி இவ, பொளைக்க மாட்டாம, வேலக்கிப் போறியளா வேலக்கிப் போறியளாங்குறது? ஏவன் வூட்டுல போயி என்ன மண்ணுகூட தூக்கச் சொல்லுற (அள. ப. 8) என்று மனைவியை யேசுவதாகக் காட்டுகிறார். பொருளாதார பிரச்சினையோ, சாதிப்பிரச்சினையோ, தொழில்ரீதியாக வரும் பிரச்சினையோ இப்படி இவற்றினால் வருவதைக் கூடப்பெண்கள் இச்சமூகத்தில் சமாளிக்க முடியும். ஆனால் கட்டிக்கொண்டவன் சரியில்லாது போனால் அஃது அப்பெண்ணையும் அவளின் தலைமுறையையும் பாதிப்புக்கு உள்ளாக்குவதை படைப்பாளர் வெளிப்படுத்தும் பாங்கு எண்ணுதற்குரியதாகும்.

பொருளாதாரப் பிரச்சினை உள்ள குடும்பங்கள் இன்று சமூகத்தில் சந்திக்கும் சிக்கல்கள் ஏராளமானவை. தாயும் தந்தையும் இருந்து குடும்பத்தில் பணம் இல்லை என்றால் அக்குடும்பம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் படைப்பாளர் சுட்டிக்காட்டுகின்றார். தாம் உழைப்பது, தம் வயிற்றுக்கும் பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்கும் போதாது என்ற சூழல் வரும்போது தாம் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுப்பதில் பெரும் சிரமம் ஏற்படும் என்பதையும் கூறுகிறார்.

## தொகுப்புரை :

மனித சமூகம் வறுமையிலிந்து மீண்டு வளம் பெற்றுள்ள தற்காலப் பொருளாதார வளர்ச்சி நிலையிலும் சமுதாயத்தில் வறுமை முழுமையாக வேரறுக்கப்படாத ஒன்றாகவே காணப்படுகின்றது. மக்களின் வறுமை நிலைக்கு நாவலாசிரியர் சு. தமிழ்ச்செல்வி,

1) வேலைவாய்ப்பின்மை,
2) போதிய வருவாய் இன்மை,
3) மது அருந்தும் பழக்கம்,
4) உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இன்மை

என்பன போன்ற காரணங்களை முன்வைக்கின்றார். வாழ்க்கையைக் காட்டுவது மட்டுமின்றி அதை விமர்சனமும் செய்வது என இருவிதமான இலக்கியக் கோட்பாடுகள் உண்டு. ஆனால் வாழ்க்கையைத் திறனாயும் முறை என்று வரும்போது தான் இலக்கியம் என்ற ஒரு கலைவரம்புக்குள் அதைச் செய்தாக வேண்டும் என்று வற்புறுத்த நேர்கிறது. சமகாலச் சமூகப்பார்வை, இன்றைய எல்லா விதமான பிரச்சினைகளையும் அக்கறையுடன் அணுகும் மனிதாபிமானமும், எந்தக் கட்டுப்பாட்டினுள்ளும் வட்டார கட்சி, மொழி, இன வட்டத்திற்குள்ளும் அடங்காத வீரியம், தாம் எடுத்துக் கொண்ட விஷயங்களில் வித்தியாசமான தனிப்பார்வை துலங்கச் செய்தல் போன்றவற்றால் ஒரு நல்ல படைப்பாளியாகத் தன்னை இனங்காட்டும் சு. தமிழ்ச்செல்வி அன்றாட வாழ்வின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் உப்பளத்தொழிலாளியின் அல்லல்களை எடுத்துரைக்கிறார்.

ஃ